# நினைவு மலர்



அமரர்

# தேவசகாயம்பிள்ளை புலோவினம்மா

12.04.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## தேவசகாயம்பிள்ளை
## புலோவினம்மா

**தோற்றம்**
**15 . 04 . 1939**

**மறைவு**
**12 . 03 . 2021**

" இறைவா என்னைக் காத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன் "

தி.பா.16:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம் !!!

ஈரைந்து மாதங்கள் எம்மைச் சுமந்து

அன்புடன் வளர்த்து ஆதரவு அளித்திட்ட எம் தாயே ...

மெழுகாக உனை உருக்கி உதிரமதை

பாலாக எமக்கு ஊட்டி

உன்னையே நம்பி உலகினில் வாழ்ந்திட்டோம் – என்று

என்றுமே உந்தன் தாழினைத் தொழுது – நாம்

பழுதிலா வாழ்வினை பாரினில் தொடர

உம் சுமையான பொழுதுகளை இதமாக்கி

குலவிளக்காய் நின்று அருளாசி தந்திடும் – தாயாரே

நின் பாதக் கமலங்களிற்கு படைக்கின்றோம்.

இம் மலரை சமர்ப்பணமாக

இங்ஙனம்,

கணவர் திரு. தேவசகாயம்பிள்ளை,

திரு. திருமதி புனிதசீலன் குடும்பத்தினர்

(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் புலோவினம்மா

# அவர்களின் பாதப் பதிவுகள்

செந்தமிழ் செழித்தோங்கி மிளிரும் இதயம் என திகழும் சென்நெல் நிறை, பனை, தெங்கு, வாழை, சூழ் கிளிநொச்சி மாவட்டத்தின் பூ மனம் கமழும் பூநகரி பகுதியில் செந்நெல்வயலும், குளமும், கடலும், கோவிலும், தென்னஞ்சோலையும், தென்றல் தேனிசை பாடி வரும் புனித அந்தோனியாரை பாதுகாவலராகவும் கொண்டமைத்திருக்கும் எழில் மிகு கிராமம் குழமுனை இவ்வருள் தரும் பூமிலிலே அம்புறோந்சு அன்னம்மா தம்பதியினர் வேளான் தொழில் புரிந்தனர். அவ்வேளையில் ஏழு பெண் பிள்ளைகளை பெற்றெடுத்தனர். இவர்களின் 3வது மகளாக புலோவினம்மா (15.04.1939) பிறந்தார். இவருக்கு மகிழம்மா, அருள்மணி, அந்தோனியாப்பிள்ளை, பெர்ணத்தம்மா, தவமணி, அற்புதமுத்து ஆகியோர் உடன்பிறப்புக்கள் ஆவார். இவரை இழையவர்கள் அன்புடன் பெரியக்கா என்று அழைத்தனர். பெற்றோருக்கு அன்பு மிக்கவராகவும் மிகவும் சகோதர பாசமுடையவரா கவும் வளர்ந்து வந்தார். தனது கல்வியினை கிளி / குமுழமுனை அரசினால் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 5 வரை கல்வி கற்றார். அவ்வேளையில் தனது தந்தையாரை ஒன்பது வயதில் இழந்தார். இவர் சிறு வயதில் இருந்தே பக்தி உடையவராகவும் பிறருடன் பழகுவதில் சிறந்தவராகவும் வளர்ந்து வந்தார். அவ்வேளை தனியே உடன் பிறவா சகோதரி அமரர் அருணாசலம் அன்னம்மா, சகோதரன் செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் அரவணைப்பையும் அன்பினையும் நன்குபெற்றார். தாயாருடன் சேர்ந்து தமது குல தெய்வமான குமுழமுனை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் சகல விழாவிற்கும் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்தார். தந்தையின் பிரிவால் தாயார் சகோதர்களுடன் சேர்ந்து பல கஸ்ரங்களை கடந்து அவற்றை எல்லாம் தாங்கி தனது வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அவ்வேளையில் இவர் மணப்பருவம் அடைந்தார். கச்சாய் மிருசுவில்லைச் சேர்ந்த அருளானந்தம் ஆனாச்சி தம்பதியினரின் நான்காவது மகனான தேவசகாயம் பிள்ளை என்பவரை திருமணம் செய்து கொண்டார். மணவாழ்வின் பயனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருளானந்தம், ஸ்ரனிஸ்லாஸ், ஞானேஸ்வரி, புனிதசீலன், இராயப்பு, மரியமதலேனம்மா, மேரிமெற்றலின், திருச்செல்வன், மரியசீலன், அன்ரன்பொஸ்ரீன், உதயராணி, அமுதினி என பன்னிரு நன்மக்களை பெற்றெடுத்து பிள்ளை செல்வங்களும் சீரும் சிறப்புடனும் தமது வாழ்வினை வாழ்ந்து வந்த வேளையில் மூத்த பிள்ளைகள் ஆறு பேரும் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டனர். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என கூட்டுக்குடும்பமாக சந்தோசமான வாழ்க்கையில் சோதனை வந்து நின்ற போது 1986 ஆம் ஆண்டு பெற்றெடுத்த தாயை இழந்தார். பின்னர் 1988 ஆம் ஆண்டு தனது மகனான செல்வத்தை இழந்து துடிதுடித்து மனமுடைந்து போயிருந்த வேளையிலேயே 1989 ஆம் ஆண்டு தனது அடுத்த மகனான சீலன் நோய்வாய்ப்பட்டு உயிர் இழந்து துன்பத்தில் துவண்டு மனவுழச்சல் சூழ்ந்த வேளையில் இவர் கணவன், சகோதரர்கள், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் அரவணைப்பில் வாழ்நது வந்தார். ஒரு சில காலங்களில் அவர்களது நான்கு பிள்ளைகளும் திருமணம் செய்து கொண்டனர். மீண்டும் மருமக்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என அவரது வாழ்க்கையில் வாழ்ந்து வரும் வேளையில் அவரது இளைய மகன் மனைவி பிள்ளைகள் எல்லோரும் வெளிநாடு சென்று (லண்டனில்) வாழ்ந்து வருகிறார்கள். எல்லோருடனும் சந்தோசமாக இருக்கும் போது அவர் தனது பேரப்பிள்ளைகளான துவாரகா, ஜெகதா, வினோதினி ஆகியவர்கள் வீரச்சாவடைந்தனர். பூட்டப்பிள்ளை பாணுமதியையும் இழந்தார். அதேவேளை 2008 ஆம் ஆண்டு போரின் போது இடம் பெயர்ந்து சென்ற போது அவரின் ஆசை மகளின் கணவர் மருமகனையும், கடைசி மகளையும் மருமகனையும் இழந்த வேளையில் கணவரும் காயமடைந்து நின்றார். செய்வதறியாது துன்பப்பட்டார். பேரப்பிள்ளைகளுடன் வவுனியா முகாமில் கலங்கி நின்றார். பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் உறுதுணையுடன் மீள்குடியேறி குமுழமுனைக் கிராமத்தில் குடியேறி மீண்டும் பேரப்பிள்ளைகளுடனும், பூட்டப்பிள்ளை களுடனும் மிகவும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். அடிக்கடி தனது குல தெய்வத்திற்கு பணிகள் செய்து வந்தார். அவ்வேளையில் பேரப்பிள்ளையான ஆசாவையும் பூட்டப்பிள்ளையான ஜெனுப்பிரியாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தார். அயலவர்களுடன் தனது உடன்பிறப்புக்களாகவே நினைத்து பழகி வந்தார். அவ்வேளையில் தனது பெறாமக்கள் மீதும் பிள்ளைகள் மீதும் அன்பாக இருந்தார். பெறாமக்கள் இவரை ஆசையுடனும் அன்புடனும் சீனி அம்மா, ஆசையம்மா, பெரியம்மா என்று அழைப்பார்.

வயது போன நிலையில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், மருமக்கள், பூட்டப்பிள்ளைகளுடனும், இளைய மகன் பராமரிப்பிலும், அவரது வீட்டிலும், ஆசைமகள் செல்லக்கிளியின் பராமரிப்பிலும் தனது இறுதி காலங்களை கழித்து வந்தார். பின்னர் 2020ம் ஆண்டு நோய் வாய்ப்பட்டு முழங்காவில் வைத்தியசாலை, கிளிநொச்சி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பலனின்றி போகவே சில வருடங்கள் அன்பான கணவன், ஆசைமிகு பிள்ளைகள், மருமக்கள், நேயமுடன் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் வீட்டிலேயே பராமரப்பில் இருந்து வந்த புலோவினம்மா அவர்கள் கடந்த 12.03.2021ஆம் ஆண்டு நள்ளிரவு 11.58 மணியளவில் இறைவனடி சேர்ந்து இவ்வுலக வாழ்விற்கு விடைகொடுத்தார்.



**"எமது குடும்ப குலவிளக்காய் ஒளிர்ந்த எம் தாயாரின் ஆன்மா**

**இறைசன்னிதானத்தில் இளைப்பாற**

**இறைவனைப் பிரார்த்திப்போம்".!!!**

**உங்கள் ஆன்மா ஈடேற்றத்திற்காய் இறைவனை வேண்டுகின்றோம்!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக் கணவரின் நெஞ்சம் நொந்தழுகிறதே ......

என் கரம் பிடித்து வந்தாயே
என் ஆருயிராய் திகழ்ந்தாயே
இன்பத்திலும் துன்பத்திலும்
இனை பிரியாது வாழ்ந்தாயே!

எல்லோரையும் போற்றி வைத்தாய்
என்ன செய்வேன் இனி
என் இதயக்கனி - உன்னை
எண்ணுவதே என் பணி

நோயென்று வீழ்ந்தில்லை - நீ
பாயினில் படுத்ததில்லை
நீதியென்று சொல்லிடவா
கடைசி காலத்தில் வீழ்ந்தாயே!

வஞ்சனை சாது கூட
உன் மனதில் கண்டதில்லை
வந்ததுவோ உந்தனுக்கு
வாழ்க்கையில் முடிவு என்று!



உன் பெருமை சொல்லிட
என்னிடமோ வார்த்தை இல்லை
இப்பிறவி முடிந்ததென்று
இறைவனடி சேர்ந்தாயே!


**"உயிர்ப்பும் உயிரும் நானே – என்னில்**

**விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு கணவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு மருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமிகு மகளும் மருமகனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈன்றெடுத்த எம் தாயே......



பாசமாய் எமைப் பெற்றெடுத்தீர்
பகலிரவாய் எமைக் காத்து வளர்த்தீர!
நாம் எத்தனை தவம் செய்தோம்
உங்கள் பிள்ளைகளாய் பிறப்பதற்கு!


நெஞ்சமெல்லாம் நிலைத்து இருந்து
ஓழிந்த தாய் மடியே - எம்
கண்கள் அழுதழுது குளமாக
உன்முகம் மட்டும் நிலவாக யாரிடம் சொல்வோம்

பிறரை நேசிக்க கற்றுத் தந்த குரு நீங்கள்
பண்பினில் மிளிரச் செய்து - எம்மை
உலகில் உயர வழி செய்தீர்கள் அம்மா
அரவணைத்து தேற்றிட எங்களுக்கு நீங்கள் வேண்டும் அம்மா

அம்மா மீண்டும் எப்போது நாம் காண்போம்
யாரை அழைப்போம் அம்மா என்று?
மீண்டும் ஓர் பிறவி எடுத்தால் - எம்
அம்மாவாக நீங்கள் வந்திட வேண்டும்.



**இழந்தவன் தேடுவதும்**
**இருப்பவன் தொலைப்பதும்**
**தாயின் அன்பு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல் இதயத்திலிருந்து ......

சிரித்த முகமும் சிந்திக்க வைத்த பேச்சும் இன்றி
என்ன செய்வோம்? ஏங்கி தவிக்கின்றோம்
அமுதூட்டி வளர்த்த தாய் போல் ஆனாய்
ஆறிடுமோ? உன் துயர்.



மருமக்களாய் வந்திருந்தும்
மறுவீடாய் நினைத்ததில்லை
எமது மாமி இல்லை - நீங்கள்
எங்கள் சாமி!

ஈன்றெடுத்த பிள்ளையாய் - எமை
பார்த்தீர் இத் தரணியில் - இன்று
விழி மூடித் தலை சாய்த்து - விண்ணுலகில்
இறைவனடி சென்றீர்களோ?

மாண்போடு வாழ்ந்தீர்கள்
மானிலத்தில் மறையாது உம் நினைவுகள்
மனம் கிடந்து துடிக்கின்றது
உங்கள் நினைவுகளால்...

**"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே**
**உரியவர்களாய் இருக்கின்றோம்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் இதயக் குமுறல் ......

அவனியில் கிடைத்த அரும் பொக்கிஷமே!
அப்பம்மா அம்மம்மா என்று நாம் அழைக்கையிலே!
பேரப்பிள்ளைகள் என்றாலே
பேரானந்தம் கொள்வீரே!

செல்லப் பெயர் சூட்டி செல்லமாய் அழைப்பீரே!
மெல்லமாய் நடந்து வந்து எமை அள்ளிடுவீரே!
நாம் கலங்கித் துடிக்கும் வேளையிலே
நல்ல அறிவுரை நாள் தோறும் சொல்லிடுவீரே!

ஆசையாய் எமை அழைத்து - நீர்
அரவணைத்து முத்தமிடுவீரே!
உங்கள் பேரப்பிள்ளைகள் - நாம்
கதறி அழுகின்றோம் உமைக் காணாது!

## பாட்டி
## உங்கள்
## நினைவில்!!!

**உன் அன்பை**
**தோற்கடிக்கும்**
**மற்றொரு அன்பை**
**உலகில் யாரும்**
**தரப்போவது இல்லை**
**உம்மை தவிர!!!**

மேரி, றஜிகரன், தினேஸ்,
டானிஸ், டனிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகளின் இதயக் குமுறல் ......

எங்கள் மழலை மொழி கேட்டு
சிரித்த எம் பூட்டம்மாவே!
ஆசையோடு எமையழைத்து
முத்தமிட வருவீரே!

பூட்டம்மா என்று அழைத்த - எம்
மொழிகள் ஓய்ந்து போனதுவே!
எமை நீங்கள் காணாது
கண்ணுறங்க மாட்டீர்களே!

பள்ளி சென்று வரும் போது
பூட்டம்மா முகம் காண செல்வோமே!
தெவிட்டாத இனிப்பதனை எமக்கு தருவீரே!
யாரிப்போ எமைத் தேடுவார்?

மீள் பிறவி எடுத்தாலும் - எங்களுக்கு
நீங்கள் தான் வேண்டும் பூட்டியாய்
படைத்தவனை வேண்டுகின்றோம் - உம்
வதனம் காண!!!



"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை
அருமையானது"

**உங்கள் ஆன்மா ஈடேற்றத்திற்காய் இறைவனை வேண்டுகின்றோம்!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமுவந்து நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு".

எம் மனையின் குலவிளக்காய் திகழ்ந்து எமை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளும் எம் தாயின் மறைவுச் கேட்டு நேரில் நின்று ஆன்ம ஈடேற்ற வழிபாடுகளில் கலந்து கொண்டும், தொலைபேசி வழியே வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும், ஆறுதல் மொழி பேசிய உறவுகளுக்கும், இரங்கல் புகைப்படங்களை சமர்ப்பித்த அன்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர் களுக்கும் இந்த நினைவு மலரினை அழகாக கணனி மூலம் வடிவமைத்து அச்சிட்ட புனித வளன் கத்தோலிக்க உரிமையாளர் அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றிகளை எம் இதயத்தின் ஆழத்தில் இருந்து தெரிவித்து நிற்கின்றோம்.



தங்களது உறவை ஆறாத்துயரிலும்
நன்றியுடன் நினைவு கூறும்

இங்ஙனம்,
பாசமிகு அன்பு கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

**உங்கள் ஆன்மா ஈடேற்றத்திற்காய் இறைவனை வேண்டுகின்றோம்!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- படுத்துக்கொண்டே சொர்கத்தை காணலாம்.. தலையணையில் அல்ல.. தாயின் மடியில்!!
- கற்காமலும் பிழை இல்லாமலும் குழந்தைகள் பேச கற்றுக் கொண்ட முதல் வார்த்தை .. அம்மா !!
- புரண்டு படுத்தால் நாம் இறந்துவிடுவோமோ என்று கருவில் இருந்த நமக்காக தூக்கத்தை கூட துளைத்து விட்டு இரவில் விழித்திருந்த சூரியன்.. அம்மா.
- வாழ்க்கையில் தியாகம் செய்பவர் தந்தை. வாழ்க்கையையே தியாகம் செய்பவள் தான் தாய்.
- வார்த்தைகளே இல்லாத வடிவம்.. அளவுகோளே இல்லாத அன்பு.. சுயநலமே இல்லாத இதயம்.. வெறுப்பை காட்டாத முகம்.. அம்மா ..!!
- எத்தனை முறை சண்டை போட்டாலும், தேடிவந்து பேசும் தெய்வம் என் தாயை தவிர வேறேதும் உண்டோ இந்த உலகினிலே..!
- மறு பிறவி இருந்தால் செருப்பாக பிறக்க வேண்டும்... என் அம்மா காலில் மிதி பட அல்ல.. என்னை சுமந்த அவளை ஒரு முறை நான் சுமப்பதற்காக..!
- அம்மாவின் அன்பு தோசை மாதிரி.. அப்பாவின் அன்பு தோசைக்கல் மாதிரி..! தோசையின் ருசி தெரியும்.. தோசைக்கல்லின் தியாகம் தெரியாது. !
- பிரம்மன் படைத்த அழகு சிற்பம் நீ... அதற்கு உயிர் தந்த அன்பின் சிகரம் உன் தாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அம்புறோஸ் +

- அமரர் மகிழம்மா
- அமரர் அருள்மணி
- அமரர் புலோவினம்மா + தேவசகாயம்பிள்ளை
- அந்தோனியாப்பிள்

## அமரர் புலோவினம்மா + தேவசகாயம்பிள்ளை

### அருளானந்தம் + மதலேனாள்

- தவசிங்கம் + றஜனிகா
  - அனோஜா
  - டிலைக்சன்
  - மதுஷன்
  - அபிசா
  - சுவிந்தன்
- யோகசிங்கம் + வசுமதி
  - அன்ரனி ஜென்சன்
  - மேரி ஜெனிஸ்ரா
  - அன்ரனி ஜெதுர்சன்
  - அமரர் ஜெனுப்பிரியா
  - ஜெதுப்பிரியா
  - சந்துரு
- அருள்சிங்கம் + விசிதா
  - அபிசா
  - அரவிந்
  - அபிலன்
- மேரி + அல்பிறட் ரவிக்குமார்
  - அலைமகள்
  - கஸ்மிலன்
  - திவானிகா
- ரூபி + சண்முகராசா
  - விந்துசன்
  - திலைக்சன்
  - கோபிசா
- கொன்சலா + மனோகரன்
  - கிருஸ்ரிகா
  - அன்ரனிஸ்ரன்
  - கிஷானிக்கா
- அமரர் ஆசா + சந்திரமோகன்

### ஸ்ரனிஸ்லாஸ் + சுசிலா (விக்கினேஸ்வரி)

- நனுசியா + செல்வலிங்கம்
  - பிருந்தா
  - பிரதீப்
  - பிரவீனா
- யசோ + சுரேஸ்குமார்
  - அருட்செல்வன்
  - தனுஸ்
  - அபினாத்
- அமரர் வினோதினி (முத்து)
- சுவேதா + பிரகாஸ்

### ஞானேஸ்வரி + தர்மகுலசிங்கம்

- குமாரகுலசிங்கம் + நாகராஜேஸ்வரி
  - ஜிலக்ஷன்
  - ஜிந்தன்
  - ஜினோத்
- அனுஷா + ரவிச்சந்திரன்
  - தங்கா
  - அமரர் பாணுமதி
  - லோஜினி
  - வினித்ராஜ்
- ஜெகன் + செல்வரூபி
  - அக்ஷயா
- அமரர் ஜெகதா
- முகுந்தன்
- சிந்துஜா + மகேந்திரன்
  - கிருசாத்
- தமிழருவி + தசிகரன்
  - தஷ்மிகா

### புனிதசீலன் + கனகலட்சுமி

(லண்டனில் வசிக்கின்றார்கள்)

- மேரி + தவராசா
  - இலக்கியா
  - சாஜனா
- றஜிகரன் + விஜயரூபி
  - அஸ்மிரா
- தினேஸ் + றேனுகா
  - தாரகை
- டானேஸ் + தர்சா
- டனிலா

### இராயப்பு + ஈஸ்வரி

- கனி
  - நிசா
  - லூச
  - டினு
- கனி + தவ
- கனி + மா
  - லது
  - கபின
  - ரிஸ்
- அமர
- டனி
  - நிறே
  - டில்
  - சஸ்
- நிக்
- ஜெய
  - செ
- கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# + அமரர் அன்னம்மா

- ...ரியாப்பிள்ளை
  - இராயப்பு + ...ஈஸ்வரி
    - கனிஸ்ரன் + நிசாந்தினி
      - லூசாளினி
      - டினுஷா
    - கனிஸ்ரா + தவம்
    - கனியூட் + மாலதி
      - லதுஷா
      - கபின்சிகா
      - ரிஸ்மிகா
    - அமரர் துவாரகா
    - டனிஸ்ரன் + நிறோஜா
      - டில்சான்
      - சஸ்வின்
    - நிக்சன்
    - ஜெயகஸ்தூரி + செந்தீபன்
    - கார்வண்ணன்
- பெர்ணத்தம்மா
  - மரிய மதலேனம்மா + ஞானசீலன்
    - தேவஜெகனா + செல்வராஜ்குமார்
      - நிதன்
      - நிசன்
    - கிருசாந்தன் + லக்சனா
      - திபிசன்
      - திபிஷிகா
    - அனோஜா + விந்தன்
    - யனோசினி
- அமரர் தவமணி
  - மேரிமெற்றலின் + கனகராசா
    - அஜந்தன்
    - பௌஸ்ரீனா
    - பௌளீனா
- அற்புதமுத்து
  - அமரர் திருச்செல்வம்
  - அமரர் மரியசீலன்
  - அன்ரன் பொஸ்ரீன் + கோகுல குமாரி
    - அனோஜன் + சர்மிதா
      - அக்ஷயா
    - அஜிந்தன்
    - அலைக்ஸ்
    - பிரியா
  - உதயராணி + கிருஸ்ணபிள்ளை
    - கிருஸ்ணராஜ்
    - பிரபாவினி
    - கலைவாணி
  - அமரர் அமுதினி + ஜெயக்குமார்
    - கௌதமி
    - கேதீஸ்
    - கனிவிழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த உலகில் நாம் நம் கண்
முன்னால் காணும்
ஒவ்வொருவரையும் நேசிக்க
இயலவில்லை என்றால்
கண்ணுக்குத் தென்படாத
கடவுளிடம் எவ்வாறு
அன்பை செலுத்த இயலும்

-அன்னை திரேசா-

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna. 021 222 2378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org